செய்திப் பணிப்பாளர்/செய்தி ஆசிரியர் 21.02.2023

**செய்தி வெளியீடு**

# தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2021=100): ஜனவரி 2023

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk**

2013=100 என்ற சுட்டெண் குறுப்பீட்டுக் காலத்தைக் கொண்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) 2023 ஜனவரி முதல் 2021= 100 என்ற புதிய சுட்டெண் குறிப்பீட்டுக் காலத்துக்கு இற்றைப்படுத்தப்பட்டது. 2023ஜனவரி மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமானது 53.2% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2023 ஜனவரி மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புக்கள் முறையே 24.2% மற்றும் 29.0% ஆக காணப்படுகின்றன. 2022 ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், 2023 ஜனவரி மாதத்தின் பொருட்டு பதிவாகிய பணவீக்கத்துக்கான பிரதான காரணம், உணவு மற்றும் உணவல்லாப் பிரிவு இரண்டிலும் நிலவிய உயர்வான விலை மட்டங்களாகும்.

மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில், 2022 டிசம்பர் மாதத்தில் பதிவாகிய 200.4 இலிருந்து 2023 ஜனவரி மாதத்தில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) (அடிப்படை 2021= 100) 201.8க்கு அதிகரித்துள்ளது. இது 2022 டிசம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 1.4 சுட்டெண் புள்ளிகள் அல்லது 0.69 வீத அதிகரிப்பைக் காட்டுகிறது. உணவு மற்றும் உணவல்லாப் பொருட்களில் முறையே 0.08% மற்றும் 0.61% ஆல் ஏற்பட்ட அதிகரிப்புகள் இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கு பங்களித்தது.

உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்புகள் பிரதானமாக தேங்காய், புதிய மீன், மரக்கறி, தேயிலை தூள்/இலை, தேங்காய் எண்ணெய், பச்சை மிளகாய், முட்டை, சின்ன வெங்காயம், புதிய பழங்கள், பால் மா, கௌபீ, கடலை மற்றும் பயறு ஆகியவற்றில் பதிவானது. எவ்வாறாயினும், விலை குறைவுகள் பிரதானமாக கருவாடு, பாண் (சாதாரண), கோதுமை மா, தேசிக்காய், அரிசி, கோழி இறைச்சி, உருளைக்கிழங்கு, டின் மீன், சீனி, காய்ந்த மிளகாய் மற்றும் மசாலா தூள் என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஜனவரி மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகளின் அதிகரிப்புகளுக்கு பிரதான காரணம், 'அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் மதிமயக்க மருந்துகள்' (சாராயம், சிகரட்கள்) 'ஆடையும் காலணியும்', 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு' சுகாதாரம் (தனியார் மருத்துவ கட்டணங்கள்), 'பொழுதுபோக்கும் கலாசாரமும்' (பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் காகிதாதிகள்), 'கல்வி' (முன்பள்ளி கட்டணங்கள்), பகுதிநேர வகுப்பு கட்டணங்கள் மற்றும் பாடநெறி கட்டணங்கள் (உயர் கல்வி), 'உணவகங்களும் ஹோட்டல்களும்' அத்துடன் 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்' (சவரப் பொருட்கள் மற்றும் களிம்புகள்) ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களாகும். எனினும், 'வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்' (பராமரிப்புக்கான பொருட்கள் எல்.பி. எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய்), மற்றும் 'போக்குவரத்து'(டீசல் மற்றும் விமான சேவை கட்டணங்கள்), ஆகிய பிரிவுகளில் விலை குறைவுகள் பதிவாகின. அதே நேரம் 'தொடர்பாடல்' பிரிவின் விலைக் குறியீடுகள் இந்த மாதத்தில் மாறாதிருந்தன.

2023 ஜனவரி மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) (அடிப்படை 2021= 100) அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது 52.0% ஆக இருந்தது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2021 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) |
| | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் | | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் |
| 2022 | ஜனவரி | 131.7 | 151.6 | 118.9 | 124.9 | | | | | | |
| | பெப்ரவரி | 132.9 | 153.1 | 119.8 | 126.2 | 0.9 | 1.0 | | | | |
| | மார்ச் | 137.3 | 156.9 | 124.6 | 130.4 | 3.3 | 3.3 | | | | |
| | ஏப்ரல் | 151.7 | 176.1 | 136.0 | 142.8 | 10.5 | 9.5 | | | | |
| | மே | 166.3 | 195.3 | 147.6 | 154.5 | 9.6 | 8.2 | | | | |
| | யூன் | 183.5 | 222.8 | 158.2 | 167.5 | 10.3 | 8.4 | | | | |
| | யூலை | 193.1 | 233.4 | 167.1 | 176.8 | 5.2 | 5.6 | | | | |
| | ஆகஸ்ட் | 197.7 | 237.5 | 171.9 | 181.2 | 2.4 | 2.5 | | | | |
| | செப்ரெம்பர் | 201.9 | 239.1 | 178.0 | 185.9 | 2.1 | 2.6 | | | | |
| | ஒக்ரோபர் | 201.6 | 236.5 | 179.1 | 188.0 | -0.1 | 1.1 | | | | |
| | நவம்பர் | 200.3 | 233.2 | 179.1 | 187.8 | -0.6 | -0.1 | | | | |
| | டிசம்பர் | 200.4 | 232.4 | 179.8 | 188.0 | 0.0 | 0.1 | | | | |
| 2023 | ஜனவரி | 201.8 | 232.8 | 181.8 | 189.8 | 0.7 | 1.0 | 53.2 | 53.6 | 52.9 | 52.0 |

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்